உ
சிவமயம்



மன்னார்-கள்ளியடி அமரர்

# சின்னத்தம்பி-வினாசித்தம்பி

அவர்கள் சிவபதமெய்தியமை குறித்த

# அஞ்சலிமலர்

## 29-04-2002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்

சொன்னதைச் செய்தும் செய்வதைச் சொல்லியும்
இப்பாரினில் வாழ்ந்து காட்டி
புரியாத பேதையற்கும் உன் தரமான தமிழாலே
உணர்வூட்டி வழிகாட்டி
பாமாலை பாடியே பரமனடி சார்ந்தவுன்
பாதார விந்தங் கட்கு
தெள்ளுதமிழிலே தீஞ்சுவையளித்திடும்
தெவிட்டாத இம்மலரை - ஐயா
அள்ளிச் சொரிந்து நாம் ஆறுதலடைகின்றோம்.

சாந்தி ஐயா



மனைவி, மக்கள்
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

மலர்வு
20
05
1917



உதிர்வு
30
03
2002

# அமரர்
# உயர்திரு. சின்னத்தம்பி - விநாசித்தம்பி

மெழுகுவர்த்தியாகித் தானுருகி
தன் குலத் தோன்றல்களை
ஒளி மயமாய் வாழவைத்த
எம் தெய்வத்தின் நினைவு
எங்கள் நெஞ்சிருக்கும் வரை
என்றும் தொடரும்.

மனைவி மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் சின்னத்தம்பி வினாசித்தம்பி அவர்களது வாழ்வும் வரலாறும்

முத்துமாரியம்மன் கோயில் கொண்டிருக்கும் அழகியபதியின் நுளைவாயிலாக இருக்கும் நீர்வளமும்,நிலவளமும், கனிதரும் மரங்களும் பயிர்களும் செழித்தோங்கி நிற்கும் கள்ளியடி எனும் கிராமத்தில் ஆரம்பக் குடிகளாய் வாழ்ந்தவர்கள் தான் அமரர் சின்னத்தம்பி அவர்களாவர். அவரது பெயர் தெரியாத வர்களே இருக்கமுடியாது.

அமரர் சின்னத்தம்பி அவர்கள் அழகும் நற்பண்பும் நிறைந்த பார்வதி என்பவரை மணந்து கண்ணியமாக பூரணம் எனும் மகளை மூத்ததாகவும் அமரர் வினாசித்தம்பியை இரண்டாவ தாகவும் பெற்றெடுத்தார்.

அமரர் வினாசித்தம்பி தனது தமக்கையாகிய பூரணத்துடன் பெற்றோருக்கு கீழ்ப்படிந்து அருமையான மகனாகவும் பூரணத்தின் ஆசைத்தம்பியாகவும் இன்புற்று வாழ்ந்துவந்தார். பூரணம் சின்னையா என்பவரை திருமணம் செய்து இன்புற்று வாழ்ந்து வருகையில் வியாழாச்சி என்னும் மகளைப் பெற்றெடுத்தனர். இவர்கள் இன்புற்று வாழ்கையில் வியாழச்சியின் குடித்தனப் பருவத்திலேயே பூரணம் இறந்து விட்டார் ஒரே ஆதரவாய் இருந்த தமக்கையை இழந்த அமரர் வினாசித்தம்பி அவர்கள் தனியனானார். ஆனாலும் பூரணதின் கணவர் சின்னையா அவர்கள் அமரர் வினாசித்தம்பி அவர்களுக்கு அத்தானாக மட்டுமல்ல நல்ல அண்ணாகவும்,அதரவாகவும் இருந்து வந்தார்.

அமரர் வினாசித்தம்பி அவர்கள் குமுளமுனை என்னும் கிராமத்திலே வசித்து வந்த அம்புறோஞ்சு இந்தினியா என்னும் தம்பதிகளின் மூத்த புதல்வி மகிழம்மாவை வாழ்க்கைத்துணைவியாக ஏற்றுக் கொண்டு மணம் முடித்து இல்லறம் என்னும் நல்ல வாழ்க்கையில் இன்புற்று வாழ ஆரம்பித்தனர்.

சின்னையா அவர்கள் மறுமணம் புரிந்து சிவபாக்கியம், சிவஞானம் எனும் பிள்ளைகளை பெற்றெடுத்தார். சிவஞானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்து பால்மறப்பதற்கு முன்பாகவே தாயை இழந்தார் சிறிது காலத்தில் தகப்பனையும் இழந்தார்.

அமரர் வினாசித்தம்பி அவர்கள் தனது தமக்கையின் கணவரான சின்னையாவை இழந்தபோது ஒத்தாசையற்று தனியனானார். அன்னாரின் வாழ்வில் தாங்கமுடியாத இழப்புக்கள் மத்தியில் தன் குடும்ப வாழ்க்கையில் எதிர் நீச்சல் போட ஆரம்பித்தார்.

அமரர் வினாசித்தம்பி தனது அன்பு மனைவிமூலம் பெற்றெடுத்த மூத்த புதல்வன்தான் முத்துலிங்கம், சிவஞானமும் முத்துலிங்கமும் ஒரே வருடத்தில் பிறந்த படியால் சிவஞானமும் மாமியினிடத்தில் பால் குடித்து இரணைப்பிள்ளைகளைப் போல் வளர ஆரம்பித்தனர். அமரர் வினாசித்தம்பி அவர்கள் தனது அத்தான் சின்னையாவுடைய மூன்று பிள்ளைகளையும் தன் பிள்ளையோடு சேர்த்து தன்பிள்ளைகளாக வளர்த்தார். அமரர் வினாசித்தம்பி அவர்கள் முத்துலிங்கம், நாகேஸ்வரி, அமிர்தலிங்கம், கனகலிங்கம், தர்மலிங்கம், மகேந்திரி, பஞ்சலிங்கம், சுந்தரலிங்கம், புஸ்பராணி, பரமலிங்கம் ஆகிய பன்னிரெண்டு பிள்ளைகளைப் பெற்றெடுத்தார்.


அமரருடைய வாழ்க்கையில் ஏற்பட்ட மற்றுமோர் தாக்கம் தான் அவருடைய பத்தாவது மகன் சுந்தரலிங்கம் இவன் சுபன் என்ற பெயரோடு மாவீரனாய் திகழ்ந்து தன் தகப்பன் பெயரையும் கிராமத்தின் பெயரையும் தேசம் அறிய 1992 செப்ரெம்பர் 25ம் திகதி மாவீரனாய் மரித்த போது அமரருடைய வாழ்வில் பேரிடி விழுந்தது. தன்மைந்தன் மரணத்தைத் தாங்கமுடியாமல் துடியாய்த் துடித்தார். அன்றிலிருந்து அவர் வாழ்வில் சோர்வு ஏற்பட்டது.

பிள்ளைகளை வளர்த் தெடுப்பது என்ன இலகுவானதா ஆனாலும் அமரர் தனது பிள்ளைகளை மிகவும் கண்டிப்பிலும் கல்வி கற்பதிலும் கமத்தொழிலை கற்றுக் கொடுப்பதிலும் கவனமாக இருந்தார். தனியனாய் அமரர் வாழ்ந்த காலத்திலும் உற்சாகமாய் உழைத்தார். குடிசை வாழ்க்கையாய் ஆரம்பித்த தனது குடும்பத்தை கோபுரம் வரை உயர்த்தினார். இது அவரின் அயராத நெற்றி வியர்வை சிந்தி உழைத்த உழைப்பின் பலனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆமரர் நோயுற்று கொழும்பு வைத்தியசாலையில் இருந்தபோது அவர் கண்ணியமாய் வளர்த்த பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் கடல்கடந்து பல இலட்சம் செலவு செய்து தங்கள் அன்புத் தகப்பனை பார்க்க ஓடிவந்தனர்.பிள்ளைகளையும் பேரப்பிள்ளைகளையும் பார்த்தபோது கண்ணீர் விட்டார். பிள்ளைகள் எத்தனை இலட்சம் செலவு செய்தாவது தகப்பனை வாழவைக்க ஏங்கி நின்றனர்.எத்தனை இலட்சத்தை செலவு செய்தென்ன? பிறந்தவர்கள் என்றோ ஒருநாள் மரித்துத்தான் ஆகவேண்டும். இது இறைவனின் நியதியல்லவா? ஆதை மீற யாரால் முடியும். வினாசித்தம்பி அவர்கள் அமரராகி விட்டார். ஆவர் ஆத்துமா சாந்தியடைய பிரார்த்திப்போமாக.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்களுக்கு இறைவன் கொடுத்த கொடை

ஐயா! இறைவன் எங்களுக்கு கொடுத்த எல்லாக் கொடைகளிலும் முதன்மையானதும் முத்தானதும் நீங்கள் தான் ஐயா! ஐயா எல்லோருக்கும் தகப்பன் உண்டுதான் ஆனால் அவர்கள் எல்லோரிலும் நீங்கள் வேறுபட்டவரையா!

நீங்கள் உங்கள் பெற்றோருக்கு இரண்டாவது மகனாகப் பிறந்து, உங்கள் ஒரே அக்காவையும் இழந்து தனியனாய் இருந்தாலும் அம்மா உங்களுக்கு ஏற்ற துணையாய் இருந்து, எம் குடும்பத்தை கட்டினீர்கள். நீங்கள் பெற்ற பிள்ளைகள் பன்னிரெண்டு பேர் நீங்கள் வளர்த்து வாழவைத்த பிள்ளைகள் மூன்று பேர் பதினைந்து பிள்ளைகளில் பத்தாவது மகன் சுந்தரலிங்கம்(சுபன்) 1992இல் இறந்தபோது ஐயா நீங்கள் துடியாய்த்துடித்து கதறியது இன்றும் எங்கள் கண்முன் நிற்கிறது. பிள்ளைகள் மேல் நீங்கள் வைத்த பாசம் எவ்வளவென்று அளவிடவே முடியாதையா! அன்றிலிருந்து உங்கள் வாழ்நாள் குறுக ஆரம்பித்ததைக் கண்டோமையா!

ஐயா! பதினைந்து பிள்ளைகளையும் வளர்த்தெடுக்க நீங்கள் பட்ட பாடுகள் எவ்வளவு? ஐயா மழையெல்லாம் உங்கள் தலையில் கொட்டியதையா? வேய்யிலெல்லாம் உங்களை வாட்டியதையா. எங்கள் ஊரில் உங்கள் காலடி படாத காடுகள் உண்டோ? கரம்பைகள் உண்டோ? வீதிகள் உண்டோ? இராப்பகலாக எங்களுக்காக பாடுபட்டீர்களே! உங்களை எப்படி மறப்போம்?

ஐயா உங்கள் உழைப்பால் நாங்கள் உயர்ந்து நிற்கிறோம். உங்கள் கண்டிப்பான வளர்ப்பால் கண்ணியமான வாழ்க்கை வாழ்கின்றோம் ஐயா. ஐயா நீங்கள் எங்களைத் தோள் மீது சுமந்து சென்ற நாட்களை நினைத்து கதறுகிறோம். நாங்கள் சுகயீனப்பட்டுவிட்டால் உங்கள் மடியில் வைத்து எங்களைத்தடவி ஆதரித்த கரங்களை நினைத்து கதறுகிறோம் ஐயா! ஐயா ஊரெல்லாம் உங்கள் உழைப்பால், வளர்ப்பால் உயர்ந்து நிற்கும் உங்கள் பிள்ளைகளுடைய வீடுகள் எல்லாமே உங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயரைத்தான் சொல்கின்றன ஐயா! இறுதிவரை உங்கள் பிள்ளைகளை கஸ்ரப்படுத்தக்கூடாது என்று வாழ்ந்தீர்களே.

ஐயா எத்தனையோ பெற்றோர் பிள்ளைகளுக்கு சிரமங்களையும் அவமானத்தையும் ஏற்படுத்தும் காலத்தில் நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்காகவே வாழ்ந்தீர்கள். உங்கள் பேரப்பிள்ளைகள் பூட்டப்பிள்ளைகள் வாழ்க்கை சிறப்பாக அமைய வேண்டுமென்று கருத்தாயிருந்து பேரப்பிள்ளைகளுடைய திருமண விடயங்களில்கூட கவனமாயிருந்து செய்துமுடித்தீர்கள். இவ்வுலகில் உங்கள் வாழ்க்கை நிறைவாக இருந்தது. சிறப்பாக இருந்தது. உயர்வாக இருந்தது.

ஐயா எங்களுக்காக உழைத்த கால்கள் எங்களை தூக்கி சுமந்த கால்கள் கரடுமுரடாய் போயிருந்ததே அந்தக் காலில் வந்த காயம் அதன் வேதனை தாங்கமுடியாமல் நீங்கள் பட்ட வேதனை எண்ணிப்பார்க்கிறோம் ஐயா. உங்கள் காலை வெட்டி என்னிடம் தந்தார்கள் அதை எடுத்து நான் புதைக்கும்படி கொண்டு சென்றபோது என் உள்ளம் குமுறியதையா என்னை சுமந்த கால்கள் ஐயோ! கடவுளே ஏன் எங்கள் ஐயாவுக்கு இந்தநிலை கதறியபடி சென்றேன். அன்பான ஐயாவுடைய கால்களை புதைக்கும்போது என் இதயமே வெடித்து விடும்போல் இருந்தது. ஐயா நீங்கள் கால் இல்லா விட்டாலும் எவ்வளவு காலம் இருந்தாலும் நாங்கள் சுமந்து பராமரித்திருப்போமே அண்ணா தன் கால் உடைந்தது என்று கூடப் பாராமல் உங்களை தூக்கி பராமரித்தாரே! ஐயா இன்று எங்களை தகப்பன் இல்லாப் பிள்ளைகளாக்கி விட்டுப் போய்விட்டீர்களே! கதறுகிறோம். ஐயா.

ஐயா! அம்மாவுக்கு எப்படி நாங்கள் ஆறுதல் சொல்வது உங்கள் பேரப்பிள்ளைகள் பூட்டப்பிள்ளைகளுக்கு எப்படி ஆறுதல் சொல்வது. உங்களைப் பார்க்க முடியாமல் போய்விட்ட அன்புத்தம்பி பரமலிங்கம்(குட்டி) மனைவி பிள்ளைக்கு எப்படி ஆறுதல் சொல்லுவொம்.

உங்கள் அன்பு மகன்
**வீ. ஆமிர்தலிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் சின்னமகனின் மக்கட் புலம்பல் தீருமோ


அப்பப்பா என்ற சொல்லை - இனி
எப்போது நாங்கள் அழைப்பது?
அப்பப்பா உங்கள் மழலை போன்ற உள்ளம் - எம்
இதயங்களை இனி எப்போது இனிக்கச் செய்யுமோ?

எம் தந்தை அன்று வடித்த கண்ணீர் - இன்றும்
எம் விழிகளில் நீர் வடிகிறது.
எம் அப்பாவின் நல்ல மதிப்பிற்கும், கௌரவத்திற்கும்
ஏன்? சீரான வாழ்க்கைக்கும் மூல வேர் நீங்கள்தானே.

காத்திடும் இமை போல் அப்பம்மாவுக்கு - ஏன்?
உங்கள் உற்றாருக்கே நீங்கள் இருந்தீர்கள்
இன்று அப்பம்மாவை "உன் வழி தனி வழி" – என
பதைபதைக்க வைத்து விட்டு சென்று விட்டீர்கள்..

ஓ....... ஓ் ஆண்டவனே! சென்ற காலம் திரும்பி வருமா?
நீங்கள் குழந்தை போன்று பேசும் குரல் எதிரொலிக்குமோ?
கல்லில் பொறித்தது போல் எம் உள்ளங்களில் - உங்கள்
அன்பைப் பொறித்து விட்டீர்கள்.

"உறவில் இன்பம் காணும் ஒவ்வொருவனும்
பிரிவை அனுபவித்துத் தான் ஆக வேண்டும்" - இந்த
வகையில்
உங்கள் முகத்தைக் காணாது துடிதுடித்து கதறி
உங்கள் அன்பை அரவணைத்து நிற்கின்றோம்.



உங்கள் பிரிவால் துயருறும்
பேரப்பிள்ளைகள்---------
**தீபன், சுபா, ருத்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வட்டூர் மருமக்களின் கண்ணீர் புலம்பல்கள்.

மாமா இன்று உங்களின் உறவில் புகுந்து பல ஆண்டுகள் ஆகின்றன. உங்களை போன்றவர் எங்களுக்கு மாமாவாகக் கிடைத்தது நாம் செய்த பாக்கியம். உங்கள் இறப்புக் கேட்டு பெரும் கவலை அடைந்தோம். உங்களை நாம் இனி எங்கு காண்போம். மண்ணுக்குள் மறைந்தாலும் மனதிற்குள் மறையவில்லை. உங்கள் மனைவி பிள்ளைகள் பரிதவித்து வாடி நிற்க அமரர் உலகம் அணைத்தது ஏனோ? சிறப்பும், பிறப்பும், இவ்வுலகில் சிறப்புப் பெறுதல் இயல்பெனினும் மறக்கவும் முடியாது. நினைவு நீங்காதென்றும் எம் நெஞ்சில் உங்கள் ஆத்துமா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.



மருமகன்மார், மருமகள்மார்
வட்டுக்கோட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் சிந்தும் நினைவுகளோடு .........

சதி செய்த சங்காரம்
விதி விளையாடிய அப்பப்பா
நித்தமும் உங்கள் துயரில்
நிம்மதியற்று நாம் ஏங்குகின்றோம்
எம் உயிரை விட்டு பிரிந்த நீங்கள்
என் இதயக்கதவுகளைத் திறக்கின்றீர்கள்

நேற்று இருந்த நீங்கள்
இன்று இல்லை என்பதால்
இதயம் வெடிக்கிறது
ஒட்சிசனா?...... காபனீரொட்சைட்டா?......
கண்களால் கண்டுபிடிக்க முடியாத
காற்றைப் போல் எங்களை
விட்டு பிரிந்து சென்றுவிட்டீர்கள்.

துன்பங்களை வென்றெடுத்து
துயரங்களை துரத்தியடித்து
வாழ்வினை வழமாக்கி வாழ்ந்து காட்டினீர்கள்
ஒரு அன்புச் சங்கிலியால்
கட்டப்பட்ட நாங்கள்
அறுத் தெறிய முடியாமலும் வெறுத் தொதுக்க
முடியாமலும் தினம் தினம் எமக்குள்
அப்பப்பா உங்களை நினைத்து
ஏங்குகின்றோம்.

கால் கழட்டியது உங்களை
வடிவு பார்க்கவே உங்களை
வேதனைப் படுத்தவோ இல்லை
நீங்கள் எங்களை விட்டு
பிரியாமல் இருப்பீர்கள்
என்பதால்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் நீங்கள் இந்த உலகமும்
வேகமாய் சுழலுது விஞ்ஞான விந்தையும்
விசித்திரம் காணுது என்று எண்ணி
பொல்லாத பூமியில் சுடலைதான்
மானிடர்களுக்கு உரித்தானதென்று சொல்லாமல் சென்று
விட்டீர்கள்.

கல்வெட்டு போல் எம் காயங்கள்
சிதறிய வெடி குண்டாய்
எம் இதய அறைகள்
பேனாவில் ஊற்றிய மைபோல்
எம் உயிர்
கல்லில் பொறித்த சிற்பமாய் அப்பப்பா
உங்கள் நினைவுகள் எங்களை விட்டு
பிரிந்து செல்லாது.

ஏன்றும் உங்கள் உயிர் பிரிவால்
ஆளாத் துயர் கொண்ட பேரன்
முத்துலிங்கம் விஜிதன்
கள்ளியடி
மன்னார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளத்தில் ஒளி வீசும் உத்தமனே

கார்சினியில் கார்மேகமென கள்ளியடி வந்துதித்தாய்
களங்கமில்லா நல் மனத்துடனே இல்லறத்தில் புகுந்து
நின்றாய்
நல்லியாளன் நங்கை மகிழம்மாவுடன் இல்லறத்தைக்
கண்டாய்
பார் புகழ பசும் பொன் மக்கள் பன்னிருவரை பெற்றாய்
கார் இருள் கனவத்திடும் பதிரவன் என கள்ளியடியூர்
வாழ்ந்தாய்.

இன்னல்கள் புரிவோரின் செயல்களை அடக்கி வைத்தோனே
இறை தொண்டு கேட்டு வருவோரின் உள்ளத்தை மகிழ
வைத்தோனே.
ஆ — நிரை தனை அன்புடன் வளர்த்து வந்தோனே.
உன்னை
அண்டினோர்க்கு அனைத்து உதவிகளை செய்தோனே.

அறிவு தனை வளர்ப்பதற்காய் கர்ண மகா வள்ளல் ஆனாய்.
அன்புடனே கேட்டு வந்தால் ஆயிரம் ஆயிரமாய் அள்ளி
வீசிடுவாய்.
உன் ஊர் பள்ளி தன்னை வளர்ப்பதற்காய் - உத்தமனே
உம் கையால் தந்த உதவி எம் நெஞ்சில் நிலைக்குதையா.

விளையாட்டுப் போட்டிதனை நடத்துவதற்காய்
விண்ணவனே
அலை மோத நெஞ்சில் உன்முன்னே வந்து நின்றால்
முழு நிலாவின் முகத்துடனே பகிடியுடன் கதைகள் சொல்லி
- பகலவனே
பண்புடனே அள்ளித்தந்தாய் பாசமுடன் தொடக்கி வைப்பாய்.

பள்ளி தன்னில் துள்ளி வரும் மழலைகட்கு
பல நாவல்கள் கற்றிடவே அகம் ஒன்று தேவையென
எண்ணி வந்தோம் உம்முன்னே
மதிமுகத்தின் புன்சிரிப்பால் மன்னவனே உன்தயவால்
இந்நிலத்தில்
ஓர் நூலகம் தவழ்ந்து வருகுது ஐயா — தரணி எங்கும்
போற்றுது ஐயா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்பள்ளி உயர்வுக்காய் எத்தனையோ உதவிகள் -
அப்பப்பா சொல்ல முடியவில்லை.
இப்பள்ளி என்றென்றும் உன்நாமம் சொல்லுமப்பா.
எண்பத்து ஐந்து ஆண்டுகள் சேர்த்து நின்று
எத்தனையோ சாதனைகள் படைத்து நின்று
இன்பமாய் இவ்வுலகில் வாழ்ந்து நின்று
இன்னல் பல பலருக்கு துடைத்து நின்று
ஆலவிருட்சமென வளர்த்து நின்றிட – அண்ணலே
இவ்வூரில் உந்தன் புகழ்வாழ்ந்திடும் வாழ்ந்திடும்.
பண்புடனே பள்ளியில் வாழ்ந்திடும் அதிபருடன் ஆசிரியரும்
அன்பு மாணவரும் அண்ணலின் ஆன்மா சாந்தி பெற
அன்புடனே இன்றைய வேண்டி நிற்கின்றோம்.

நன்றி

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
மன்/ கள்ளியடி அ.த.க.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவாரம்

குனித்த புருவமும் கொவ்வைச் செவ் வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்தபொற் பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டு வதேஇந்த மாநிலத்தே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே யாய சிவபதமளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்தருளுவதினியே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்த தோருணர்வே
தெளிவளர் பளிங்கின் திரண்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பேல்.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம்பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா! நீ ஆடும்போது உன்னடியின் கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

சோடிழந்த அன்றிலைப்போல் துயரமானேன்
தோகைமயில் வாயில் அகப்பட்ட சர்ப்பமானேன்
காடுகளினம் பிரிந்த கலைகளானேன்
கருங்கடலிற் காற்றுகெக்கும் கப்பலானேன்
ஓடுகின்ற பாய்மரத்தின் காகமானேன்
உற்றா ரொரிவலாப் பித்தனானேன்
பாடுபட யானறியேன் பழனிமலைக் கந்தா!
சண்முகா! சரவணபவானந்தா!
வேற்றிவேலெடுத்து வீசி விளையாடுவேலா!
நீயெனை பச்சை மயிலேறி வந்தெனை ஆட்கொள்வாய்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்த திருக்கேதீச்சரப்பதிகம்

பண் :- நட்டபாடை (ஏழாந் திருமுறை)

1. நத்தார் படை ஞானன் பசு வேறிந்தனை கமிழ்வாய்
மத்தம் மதயா னையுரி போர்த்த மணவாளன்
பத்தாகிய தொண்டர் தொழு பாலாவியின் கரைமேல்
செத்தார் எனும் பணிவான் திருக்கேதீச்சரத்தானே.

2. சுடுவார் பொடி நீறுந்நல்ல துண்டப் பிறை கீழும்
கடமார்களி யானையுரி அணிந்த கறை கண்டேன்
படஏரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
திடமா உறை கின்றான் திருக்கேதீச்சரத்தானே.

3. அங்கம் மொழி யன்னாரவர் அமரர் தொழுதேத்த
வங்கம் மலிகின்ற கடல் மாதோட்ட நன்நகரில்
பங்கஞ் செய்த பிறை சூடினன் பாலாவியின் கரைமேல்
செங்கண் அர அசைத்தான் திருக்கேதீச்சரத்தானே.

4. கரியகறைச் கண்டன்நல்ல கண்மேல் ஒரு கண்ணான்
வரிய சிறை வண்டு யாழ் செய்யும் மாதோட்ட நன்நகருள்
பாரிய திரை எறியாவரு பாலாவியின் கரைமேல்
தெரியும் மறை வல்லான் திருக்கேதீச்சரத்தானே.

5. அங்கத்துறு நோய்கள் அடி யார்மேல் ஒளித்தருளி
வஞ்சம் மலிகின்ற கடல் மாதோட்ட நன்நகரில்
பங்கஞ் செய்த மடவாகொடு பாலாவியின் கரைமேல்
தெங்கம் பொழில் சூழ்ந்த திருக்கேதீச்சரத்தானே.

6. மெய்யவினை யாஅடி யார்மேல் ஒளித்தருளி
வையம்மலி கின்றகடல் மாதோட்டன் னகரில்
பையோரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
செய்யடை முடியான்திருக் கேதீச்சரத்தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. ஊனத்துறு நோய்களடி யார்மேல் ஒழித் தருளி
வானத்துறு மலியுங் கடல் மாதோட்டநன் னகரில்
பானத்துறு மொழியாளொடு பாலாவியின் கரைமேல்
ஏனந்(து) எயி றணிந்தான்திருக் கேதீச்சரத்தானே.

8. அண்டன்அடி காகஅரை தன் மேலரவு ஆர்த்து
மட்டுண்டவன் டாலும்பொழில் மாதோட்டநன் னகரில்
பட்டவரி நுதலாளொடு பாலாவியின் கரைமேல்
சிட்டன்றமை ஆள்வான் திருக்கேதீச்சரத்தானே.

9. மூவரென இருவரென முக்கண்ணுடை மூர்த்தி
மாவின்கனி தூங்கும்பொழில் மாதோட்டநன் னகரில்
பாவம்வினை அறுப்பார்பயில் பாலாவியின் கரைமேல்
தேவன்எனை ஆள்வான்திருக் கேதீச்சரத்தானே.

10. கறையார்கடல் சூழ்ந்தகழி மாதோட்டநன் னகருள்
சிறையார்பொழில் வண்டுயாழ்செயுங் கேதீச்சரத்தானே
மறையார்புகழ் ஊரான்அடித் தொண்டனுரை செய்த
குறையாத்தமிழ் பத்துஞ்சொலக் கூடாகொடு வினையே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருஞான சம்பந்த மூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்த திருக்கேதீச்சரத் திருப்பதிகம்.

பண்:- நட்டராகம் (இருண்டாம் திருமுறை)

**திருச்சிற்றம்பலம்**

விருது குன்றமா மேருவில் நாணர
வா அனல் எரியம்பாப்
பொருது மூவெயில் செற்றவன் பற்றி நின்று
உறைபதி எந்நாளும்
கருது கின்றஊர் கனைகடற் கடிகமழ்
பொழிலணி மாதோட்டம்
கருத நின்றருகே தீச்சரங் கைதொழக்
கடுவினை அடையாவே.

பாடல் வீணையர் பலபல சரிதையர்
எருதுகைத் தருநட்டம்
ஆடல் பேணுவர் அமரர்கள் வேண்டநஞ்
சுண்டிருள் கட்டத்தர்
ஈடமாவது இருங்கடற் கடையினில்
எழில் திகழ் மாதோட்டம்
கேடி லாதகே தீச்சரந் தொழுதெழக்
கேடுமிடர் வினைதானே.

பேண்ணொர் பாகத்தார் பிறைவர்சடையினர்
ஆறைகழல் சிலம்பார்க்கச்
கண்ணம் ஆதரித் தாடுவர் பாடுவர்
அகந்தொறும் இடுபிச்சைக்கு
உண்ண லாவதோர் இச்சையின் உழல் பவர்
உயர்தரு மாதோட்டத்து
அண்ணல் நண்ணுகே தீச்சரம் அடைபவர்க்கு
அருவினை அடையாவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொடிகொள் மேனியர் புலியதன் அரையினர்
விரி தரு கரந்தேத்தும்
வடி கொள் மூவிலை வேலினர் நூலினர்
மறிகடல் மாதோட்டத் (து)
அடிகள் ஆதரித் (து) இந்தகே தீச்சரம்
பரித்த சிந் தையராகி
முடிகள் சாய்ந்தடி பேணவல் லார்தம்மேல்
மேய்த்தெழும் வினைபோமே

நல்லர் ஆற்றவும் ஞானதன் குடையர்தம்
மடைந்தவர்க்(கு) அருளிய
வல்லர் பார்மிசை வான்பிறப்(பு) இறப்பிலர்
மலிகடல் மாதோட்டத்(து)
எல்லை யில்புகழ் எந்தைகே தீச்சரம்
இராப்பகல் நினைந்தேத்தி
அல்லல் ஆசுறுத்(து) ஆனடி இணை தொழும்
அன்பராம் அடியாரே.

பேழை வார்சடைப் பெருந்திரு மகள்தனை
பொருந்தலைத் தொகுபாகம்
மாழை அங்கயற் கண்ணிபால் அருளிய
பொருளினர் குடிவாழ்க்கை
மருவிய மாதோட்டம்
கேழல் வெண்மடுப் பணிந்தநீள் மார் பர்கே
தீச்சரம் பிரியாரே.

பண்டு நால்வருக்(கு) ஆறமுரைத் தருளிப்பல்
லுலகினில் உயிர்வாழ்க்கை
கண்ட நாதனார் கடலிடங் கைதொழக்
காதலித் துறைகோயில்
வண்டு பண்செயு மாமலர்ப் பொழில்மஞ்ஞை
நடமிடு மாதோட்டம்
தொண்டர் நாள்தொழும் துதிசெய அருள்செய்கே
தீச்சரம் அதுதானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னி லங்கையர் குலபதி மலைநலிந்
தெடுத்தவன் முடிதிண்டோள்
தன்ன லங்கெட அடர்ந்தவற் கருள் செய்த
தலைவனார் கடல்வாயப்
பொன்னி லங்கிய முத்துமா மணிகளும்
பொருந்திய மாதோட்டத்(து)
உன்னி அன்பொடும் அடியவர் இறைஞ்சுகே
தீச்சரத் துள்ளாரே.

பூவு ளானுமல் பொருகடல் வண்ணனும்
புவியிடந்(து) எழுந்தோடி
மேவி நாடியநின் னடியினை காண்கிலா
வித்தகம் என்னாகும்
மாவம் பூகமும் கதலியும் நெடுங்குமா
தோட்டநன் நகர் மன்னித்
தேவி தன்னொடுந் திருக்கே தீச்சரத்
திருத்த எம் பெருமானே

புத்த ராய்ச்சில புனைதுகில் உடையவர்
புறனுரைக் சமணாதர்
எத்த ராகிநின்(று) உண்பவர் இயம்பிய
ஏழைமை கேளேன் மின்
மத்த யானையை மறுகிட உரிசெய்து
போர்த்தவர் மாதோட்டத்(து)
ஆத்தவர் மன்னுபா லாவியின் கரையிற்கே
தீச்சரம் அடைமின்னே

மாடெ லாமண முரசெனக் கடலின(து)
ஓலிகவர் மாதோட்டத்(து)
ஆடல் ஏறடை அண்ணல்கே தீச்சரத்(து)
ஆடிகளை அணிகாழி
நாடு ளார்க்கின்ற ஞானசம் பந்தன்சொல்
னுவின்ழெற பாமாலைப்
பாடலாயின பாடுமின் பக்தர்கள்
பரகதி பெறலாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவராய சுவாமிகள் அருளிய

# கந்தர் சஷ்டி கவசம்

காப்பு

அமரர் இடர் தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி

துதி

துதிப்போர்க்கு வல்வினைபோம். துன்பம்போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்(து) ஓங்கும்
நிஷ்டையுங் கைகூடும், நிமலர் அருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

நூல்

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி ஆட
மையல் நடஞ்செயும் மயில்வா கனனார்
கையில்வே லால்எனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண்டு இலங்க
விரைந்து எனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியும் சௌவும் கிளரொளி ஐயும்
நிலைபெற்று என்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடும் நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத்து அழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழகு உடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இரு தொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம் பொலிமுழங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்தனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரம்மகிழ்ந்து உதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதன் என்று
உன்திரு வடியை உறுதியென்று எண்ணும்
என்தலை வைத்து உன் இணையடி காக்க
என்னுயிர்க்கு உயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என் இளம் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாண் ஆம் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடி இணை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நல்துணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழுதும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராக் கதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடு அனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்து ஓடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டிய பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதும் அஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
கால தூதாள் எனைக் கண்டால் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரன்று புரண்டிட
வாய்விட்டு அலறி மதிகெட்டு ஓடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டு உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செக்கு செக்கு செதில்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணல் அதுவாக
விடுவிடு வேலை வெருண்டு அது ஓட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந்து ஓட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்து உயர் அங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் புருதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லாது ஓட நீ எனக்கு அருள்வாய்
ஈரேழு உலகமும் எனக்கு உறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்து உறவாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவம்ஒளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்து தேவர்கள் கடும்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்து உறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தில் மாமலை உறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத்து அரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யான் உனைப் பாட
எனைத்தொடர்ந்து இருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசம் ஆக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன் அருளாக
அன்புடன் இரக்ஷி அன்னமும் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்திபெற்று அடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்பது உன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவள் ஆமே
பிள்ளையென்று அன்பாய்ப் பிரியம் அளித்து
மைந்தன் என்மீதுன் மனம்மகிழ்ந்து அருளித்
தஞ்சம் என்றடியார் தழைத்திட அருள்செய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கம் துலக்கி
நேச முடன் ஒரு நினைவது ஆகி
கந்தர் சஷ்டி கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத்து ஆறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறு அணிய
அட்ட திக்கு உள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்னர் எண்மர் சேர்ந்தங்கு அருளுவர்
மாற்றலர் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமதன் எனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத்து அடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியால் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்து அடி
அறிந்து எனதுள்ளம் அட்ட லட்சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்து உணவாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்து அமுதளித்த
குருபரன் பழநிக் குன்றினில் இருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத்து ஆட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறமகள் மனமகிழ், கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோர் அரசே
மயில்நடம் இடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவ ஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**டி - மன்னார்**

**னத்தம்பி**

**ார்வதி**

பூரணம் (காலஞ்சென்ற)
+
சின்னையா (காலஞ்சென்ற)

வியாளாச்சி + தில்லையம்பலம்

ம்

அமிர்தலிங்கம்
+
செல்வகுணவதி
↓
தீபன்
சுபா
ருத்

கனகலிங்கம்
+
வசந்தமல்லிகா
↓
லிங்கேஸ்வரன்
கோகிலவர்த்தனி
துரேஸ்வரன்
பகீரதன்
லோகேஸ்

தர்மலிங்கம்
+
சந்திரவதனி
} லண்டன்
↓
அஜந்தா
வேணி
வாணி

மகேந்திரி
செல்வச்சீராளன்
↓
துஸ்யந்தராசா
துஸ்யந்தினி
துசிகலா
தர்சன்

வசந்தன்

இந்துமதி

வசந்தகுமாரி
↓
சதுர்சன்
தனுசன்
நிதர்சன்
} லண்டன்

தினி
சா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குமிழமுனை - பூ

**அம்புறோஸ்**

**இத்தினியா**

மகிழம்மா

அருள்மணி (காலஞ்சென்ற)

புலோனம்மா

தங்கச்சியம்மா

இராசலிங்கம் + கௌரி — லண்டன்

- நிசாந்தன்
- கேசிகா
- லக்சிகா

பஞ்சலிங்கம் + அஜந்தா — லண்டன்

- மயூரன்
- செந்தூரன்
- குமரன்

சுந்தரலிங்கம் (சுபன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குமிழமுனை - பூனகரி
## அம்புறோஸ்
## இத்தினியா

தங்கச்சியம்மா

குஞ்சம்மா

அற்புதம்

ண்டன்

சுந்தரலிங்கம் (சுபன்)

புஸ்பராணி
+
கந்தசாமி (லண்டன்)

குமுதினி
சுமணன்
மயூரியா
துளசிகரன்

பரமலிங்கம்
+
சற்குணவதி

ஈழவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எமது காவலனாய் ஒளிவிளக்காய். திகழ்ந்து எம்இன உறவுகளை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட எம் தந்தையின் மறைவுச் செய்தியைக் கேட்டு நேரில் வந்தும். தொலைபேசி மூலமும் தொடர்பு கொண்டும் எம்தந்தை நோய்வாய் பட்டிருந்த போது உடனிருந்த உதவியவர்களுக்கும். கிரியைகளில் கலந்து ஆறுதலும் அனுதாபமும் தெரிவித்த. உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் இம்மலரை அச்சிட்டு உதவிய விஜயதர்சிகா அச்சகத்தாருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்ஙனம்

**அன்னாரின் மனைவி மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.**

விஜயதர்சிகா (அச்சகம்) மூர்வீதி, மன்னார்.
தொ.பே. இல -023-32006 FAX No -023-32716

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org